முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1332

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.05.2023,** செவ்வாய்கிழமை

1. ஆறுமுகன் என் அவதார ஞானியே
   அரங்கனே ஞான தேசிகனே
   மாறுதலை உலகில் புரிவேன் என்று
   மாதவத்தை கலியில் சக்தியாக இறக்கி
2. இறக்கியே அற்புதம் நடத்துகின்ற
   ஏற்றமிகு அரங்கனே தர்மனே
   வரங்களென உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
3. ஆசியதும் சோபகிருது விடை திங்கள்
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 09 ம் நாள், 23.05.2023, செவ்வாய்கிழமை)
   அரங்கனுக்கு சக்திகூட எடுத்துரைப்பேன்
   வாசிவென்ற ஞானியர் கூட்டம்
   வணங்கி அரங்கன் உன்னுள் இணைந்து நிற்க
4. நிற்கவே தர்மம் வெற்றி காணுதப்பா
   நினைத்தவண்ணம் தர்மத்தால்
   உலக மாற்றம் நிகழுமப்பா
   உற்றதொரு உன் தர்மத்தை காக்கும்
5. ஒவ்வொரு அன்பர்களும் இந்த கலியினிலே
   மாற்றம் கண்டு அரங்கன் உன்னால் கடைத்தேற்றம் பெறுவரப்பா
   பெருமைபட அரங்கன் நாமஜெபத்தை
   பிசகின்றி ஜெபதபமாக செய்யும் மக்களுக்கு
6. வருங்காலம் ஞானலோகமாக
   வையகத்தில் ஞான சித்திகளாகவும் உண்டாகக் கூடும்
   ஆகவே அரங்கன் வழி அற்புதத்தை நடத்த
   அகிலத்தில் ஒன்றிணைந்த அன்பர்களெல்லாம்
7. வரமென அரங்கன் வழி தர்மத்தை
   வழிமொழிந்து காத்து வந்தால் போதும்
   வையகமே சடுதி மாற்றங்காணும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–